**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

DEPOSITION OF WITNESS
**CC.No.245/2022**
PW-5

| | | | |
|---|---|---|---|
| Name | செல்வம் (PW1) | | |
| Father's Name | பழனிவேல் | | |
| Village | ஆட்டயம்பாளையம் | | |
| Taluk | அவிநாசி | | |
| District | திருப்பூர் மாவட்டம் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10**th day of February 2026** by M.Thangamani, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused No.1 and 2 present)*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):–**

**1)** நான் மேற்படி முகவரியில் குடியிருந்து கொண்டு நான் தள்ளுவண்டி கடை வைத்து நடத்தி வருகிறேன். கடந்த 09.06.2022 ம்தேதி இரவு சுமார் 10.30 மணி முதல் 11.00 வரைக்குள் என்னுடைய தள்ளுவண்டி கடையில் டிப்பன் சாப்பிட வந்தார்கள். அவர்கள் சுமார் 6 பேர் கொண்ட குடும்ப உறுப்பினர்கள் ஆவார்கள். அப்போது ஆஜாரில் உள்ள எதிரிகள் இருசக்கர வாகனத்தில் வந்து விலாசம் கேட்பது போல் எதிரி சரவணன் வாகனத்தில் இருந்து இறங்கி வந்து கேட்டார். அப்போது இரண்டாம்எதிரி ஜெகநாதன் இருசக்கர வாகனத்தின் ஓட்டுனர் சிட்டில் அமர்ந்து வாகத்தை இயக்கி நிலையில் இருந்தார். அப்போது அருகில் இருந்த நபரின் கழுத்தில் இருந்த செயினை சரவணன் பறித்து கொண்டு வண்டியில் ஏறி சென்றுவிட்டார்கள். நாங்கள் சத்தம் போட்டோம் பிடிக்க முடியவில்லை. இது சம்பந்தமாக தாமரை செல்வி புகார் கொடுத்தார் போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில் :**

சம்பவம் நடந்த நேரத்தில் நான் கடையில் வேலை செய்தேன் என்றால் சரிதான்.

சம்பவ சமயத்தில் எனது கடையில் எத்தனை பேர்கள் இருந்தார்கள் என்றால் சுமார் 10 பேர்கள் இருந்தார்கள். மேற்சொன்ன விபரத்தைதான் நான் காவல்த்துறை விசாரணையில் சொன்னேன். எதிரிகளின் அங்கம் அடையாளம் குறித்து குறிப்பிட்டு சொன்னேன். எதிரிகளின் வாகனம் பற்றிநான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். திசையை பற்றி நான் குறிப்பிட்டு சொல்லி உள்ளேன். சம்பவத்திற்கு முன்பு நான் எதிரிகளை பார்த்தது இல்லை. எனது கடை அமைந்துயிருப்பது அதிக போக்குவரத்து உள்ள பகுதி என்றால் சரிதான். சம்பவ நேரம் இரவு நேரம் என்றால் சரிதான். எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்பந்தம் இல்லை என்றும் காவல்த்துறை கேட்டுக்கொண்டதற்கு இணங்க என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** : இல்லை

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>Sd–N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |